FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2021 செப்டம்பர்

தொகுதி 09


லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக எதிர்வரும் நவம்பர் 02 ஆம் திகதி வழக்கு விசாரணை நடத்த திகதியிடப்பட்டமை.


அம்பாறையை தளமாகக் கொண்டு பணியாற்றும் சுயாதீன பத்திரிக்கையாளர் ஷாஹிர் கான் ஃபாரூக் காவல்துறையினரால் தாக்கப்பட்டதுடன் அவரது கேமராவும் சேதமாக்கப்பட்டமை.


பிரபல அழகு கலை நிபுணரான சூலா பத்மேந்திர குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறிக்கையானது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பேச்சு உரிமை, கருத்துரிமை தொடர்பான பிரச்சினைகள், புதிய சட்ட உருவாக்கம் மற்றும் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 12 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் செப்டம்பர் 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த மாத நிகழ்வுகளில், குடிமக்களின் அனைத்து விதமான உரிமைகளையும் பாதிக்கும் அவசரகாலச் சட்டம் இயற்றுவதற்கான பாராளுமன்ற ஒப்புதல் பெறப்பட்டமை, மேலும் பல பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை குற்றப்புலனாய்வு விசாரணைக்கு அழைத்தமை கவனிக்கத்தக்கதாகும். சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு அரசின் இந்த செயற்பாடுகள் தொடர்பில் கண்டன அறிக்கை வெளியிட்டன.

## செப்டம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. அம்பாறையை தளமாகக் கொண்டு பணியாற்றும் சுயாதீன பத்திரிக்கையாளர் ஷாஹிர் கான் ஃபாரூக் காவல்துறையினரால் தாக்கப்பட்டதுடன் அவரது கேமராவும் சேதமாக்கப்பட்டமை.
2. ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
3. மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான புண்யமூர்த்தி சசிகரனிடம் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் காவல்துறையினரால் விசாரணை நடத்தப்பட்டது.
4. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போனது குறித்து "காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு"அளித்த புகாருக்கு குறித்த அலுவலகம் அளித்த பதிலில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அதிருப்தி அடைந்தமை.
5. இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் குறித்த தொடர் விவாதங்களை ஏற்பாடு செய்தமை.
6. தகவல் சட்டத்தை பயன்படுத்தி பெறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு சமூக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் மோசடி வழக்கில் வெற்றிப் பெற்றமை.
7. கொத்தலாவல சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டம்

தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 ஆர்வலர்களை தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டமை.

8. சர்வதேச தகவல் அணுகல் தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் திறந்த கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை. (தேர்தல் மோசடி தொடர்பான வெற்றி வழக்கை கருப்பொருளாக கொண்டு)

9. மனித உரிமைகள் போக்குகளை ஆய்வு செய்ய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தமை.

10. சதொசவில் நடந்ததாகக் கூறப்படும் பெரிய அளவிலான ஊழல் குறித்து வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் லங்காதீப, திவயின மற்றும் "த ஐலண்ட்" செய்தித்தாள்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் குழுவை குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு விசாரணைக்காக அழைத்தமை.

11. கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ள லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்கவால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தொலைபேசி அழைப்பு தொடர்பாக பிரபல அழகு கலை நிபுணரான சூலா பத்மேந்திர குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டமை.

12. சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக எதிர்வரும் நவம்பர் 02 ஆம் திகதி நெதர்லாந்து ஹேங் நகரத்தில் அமைந்துள்ள "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்" The People's Tribunal on the Murder of Journalists வழக்கு விசாரணை நடத்த தீர்மானம் செய்யப்பட்டமை.

**அட்டவணை எண்: 01**

**அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை – 2021 செப்டம்பர் மாதம்**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 05 |
| 02 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 04 |
| 03 | கட்டமைப்புரீதியான விதிமுறைகள் | 03 |
| | **மொத்தம்** | **12** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் பல நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் செப்டம்பர் மாதத்தில் கண்காணிக்கபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். கருத்து சுதந்திர தலைப்பின் கீழ், அமைதியான முறையில் ஒன்றுகூடல், எதிர்ப்பு தெரிவித்தல் மற்றும் போராட்டம் செய்வதற்கான உரிமை ஆகியவை உள்ளடங்கும். செப்டம்பர் மாதத்தில் மேலே குறிப்பிட்ட அடிப்படை உரிமை மீறல்கள் ஐந்து பதிவாகியுள்ளன. சட்டப் புத்தகத்திலிருந்து குற்றவியல் அவதூறுச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும், அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்த காலத்தில் போல அமைச்சர்களின் முறைப்பாட்டிற்கு அமைய செய்தி ஆசிரியர் மற்றும் ஊடகவியலாளர்களை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வரவழைத்து விசாரணை நடத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கையானது ஜனநாயக சமூகத்தின் பாதிப்பிற்கு வழிவகுக்கும்.**

**அட்டவணை 2:**

**2021 செப்டம்பர் மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 05**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தாக்குதல் சம்பவம் | 01 |
| 02 | உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 04 |
| | **மொத்தம்** | **05** |

1. அம்பாறையை தளமாகக் கொண்டு பணியாற்றும் சுயாதீன பத்திரிக்கையாளர் ஷாஹிர் கான் ஃபாரூக் காவல்துறையினரால் தாக்கப்பட்டதுடன் அவரது கேமராவும் சேதமாக்கப்பட்டமை.

செப்டம்பர் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை அக்கரைப்பற்று காவல்துறை அதிகாரிகள் , சுயாதீன ஊடகவியலாளர் ஷாஹிர் கான் ஃபாரூக்கை தாக்கி, அவரது வீடியோ கேமராவை சேதப்படுத்தி, அவரை ஜீப்பில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அவர் அம்பாறை அட்டாளைச் சேனையில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறும் போது, அவர் உரிய முறையில் முகமூடி அணியவில்லை என்று குற்றம் சாட்டி அவரை தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஏறக்குறைய இரண்டு மணிநேரம் அக்கரைப்பற்று பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் ஊடகவியலாளர் விடுவிக்கப்பட்டதுடன், அவரை தாக்கிய அதிகாரிகள் மன்னிப்பு கோரியதுடன் வீடியோ கேமராவை தாக்கியமைக்காக நஷ்டஈடு வழங்குவதற்கு உடன்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். இருப்பினும் இணங்கியமைக்கு அமைய செயற்படாதலால் குறித்த ஊடகவியலாளர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புகார் அளித்துள்ளார்.

ஆதாரம்: tamilleader.lk

2. **மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான புண்யமூர்த்தி சசிகரனிடம் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் காவல்துறையினரால் விசாரணை நடத்தப்பட்டது.**

செப்டம்பர் 14 ஆம் திகதி மட்டக்களப்பு சிரேஷ்ட போலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள சிறப்பு குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவுக்கு வரவழைக்கப்பட்டதாகவும், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்துகொண்டதாகவும் ஊடகவியலாளர் புண்யமூர்த்தி சசிகரன் குறிப்பிடுகின்றார். அவரை கைது செய்ய திட்டமிட்டுள்ளதாக “சிலோன் நியூஸ்” இணையதளத்தில் வெளியான செய்தி தொடர்பில் அந்த இணையதளம் அவரை பேட்டி கண்டதா என காவல்துறை அதிகாரிகள் அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அங்கு சசிகரன் காவல்துறையினருக்கு தெரிவித்ததாவது ”காவல்துறையினர் தன்னை தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்துவதை அடிப்படையாக கொண்டு தன்னை கைதுசெய்வதற்கு தயாராகுவதாக வெளிப்படுத்தும் வகையில்” கடந்த ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி காவல்துறையினருக்கு வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்த கருத்து அந்த செய்தி பிரசுரிப்பதற்கான பின்னணி ஆகும்.

புண்யமூர்த்தி சசிகரனிடம் பல முறை காவல்துறையினரால் கேள்வி எழுப்பப்பட்டு வருவதுடன், இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் இலங்கை கடற்படைக்கு குற்றம் சுமத்தப்பட்டுள்ள பின்னணியில், கொல்லப்பட்ட மீனவர்களின் நினைவேந்தலை ஏற்பாடு செய்தமை என்ற சந்தேகத்தில் காவல்துறையினர் தொடர்சியாக தன்னிடம் விசாரணை நடத்துவதாகவும், அந்த நடவடிக்கைக்கு தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதாகவும் அவர் ஊடகத்திற்கு தெரிவித்தார்.மேலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் காவல்துறை விசாரணை தொடர்பில் அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டகளப்பு கிளையில் முறையீடு செய்துள்ளார்.

ஆதாரம்: theleader.lk

3. **சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக எதிர்வரும் நவம்பர் 02 ஆம் திகதி நெதர்லாந்து ஹேறங் நகரத்தில் அமைந்துள்ள "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்"** The People's Tribunal on the Murder of Journalists **வழக்கு விசாரணை நடத்த திகதி தீர்மானம் செய்யப்பட்டமை.**

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போனமை தொடர்பில் "காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில்" (OMP) அளிக்கப்பட்ட முறையீட்டிற்கு பதிலளிக்கும் விதமாக குறித்த முறையீட்டில் உள்ள தகவல்கள் போதுமானதாக இல்லை என்று அலுவலகம் தெரியப்படுத்தியதை தொடர்ந்து அந்த பதில் குறித்து புகார்தாரரான சந்தியா எக்னலிகொட விமர்சன ரீதியான மறுபதிலை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் தற்போதைய தலைவரான உபாலி அபேரத்ன, அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக தலைமைவகித்தபோது பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டமை தொடர்பில் காணப்பட்ட வழக்கு விசாரணைகள் இரண்டினதும் (HC 209/19 மற்றும் HC (TAB) 725/19) குற்றப்பத்திரிகை கைவிடப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்ததுடன் குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையையும் இக்கடிதம் சுட்டிக்காட்டியுள்ளது. மேற்கண்ட வழக்குகள் தொடர்பில் பழிவாங்கல் சம்பந்தமான ஆணைக்குழு மேற்கொள்ளும் விசாரணைக்கு தன்னை அழைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சர்வதேச அளவில் கவனத்திற்கு உள்ளான வலிந்து காணாமல ஆக்கப்பட்டமை சம்பந்தமாக தெளிவான சாட்சிகள் கொண்ட இரு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கவும், விசாரணை நடத்திய அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கவும் பரிந்துரைத்த நபரை "காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின்" தலைவராக நியமித்தமையானது அந்த நிறுவனம் தொடர்பான நண்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் செயற்பாடாக காணப்படுகின்றது.

ஆதாரம்: yournews.lk

4. **கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ள லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்கவால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தொலைபேசி அழைப்பு தொடர்பாக பிரபல அழகு கலை நிபுணரான சூலா பத்மேந்திர குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள லங்கா ஈ நியூஸ் பத்திரிக்கையாளர் கீர்த்தி ரத்நாயக்கவால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி அழைப்பு குறித்து பிரபல அழகு கலை நிபுணரான சூலா பத்மேந்திரவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் சுமார் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளது. அக்டோபர் 2 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஆஜராகும்படி செப்டம்பர் மாத இறுதியில் அவருக்கு அறிவிக்கப்பட்டது, இருப்பினும் காரணம் என்ன என்று கூறப்படவில்லை.

ஒரு கலைஞராக, பல்வேறு ஊடகவியலாளர்களின் அழைப்புகளுக்கு பதிலளிப்பது ஒரு பொதுவான நிகழ்வு என்றும், 2020 திருமதி இலங்கை அழகு ராணி போட்டியில் நடந்த சர்ச்சைக்குரிய சம்பவம் குறித்து அவரிடம் தொலைபேசியில் கேட்டதைத் தவிர பத்திரிகையாளர் கீர்த்தி ரத்நாயக்கவுக்கும் தனக்கும் வேறு எந்த அறிமுகமும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

லங்கா ஈ நியூஸ் இணையதளத்தின் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க, இந்திய தூதரகத்திற்கு தகவல் அளித்ததற்காக கைது செய்யப்பட்டு 50 நாட்களுக்கு மேல் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது தொலைபேசி விவரங்களைச் சரிபார்த்த பிறகு, சமூக ஊடக ஆர்வலரான துஷாரா

வன்னியாராச்சியும் இதேபோல் விசாரிக்கப்பட்டார்.

ஆதாரம்: www.youtube.com

5. **சதொசவில் நடந்ததாகக் கூறப்படும் பெரிய அளவிலான ஊழல் குறித்து வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் லங்காதீப, திவயின மற்றும் "த ஐலண்ட்" செய்தித்தாள்கள் உள்ளிட்ட பத்திரிகையாளர்கள் குழுவை குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு விசாரணைக்காக அழைத்தமை.**

லங்காதீப, திவயின மற்றும் த ஐலன்ட் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைச் செப்டம்பர் 30 ஆம் திகதி அன்று சதொச நிறுவனத்தின் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முன்னால் பணிப்பாளர் நாயகம் துசான் குணவர்த்தன வெளிக்கொண்டு வந்த பாரிய அளவிலான மோசடிகள் மற்றும் ஊழல்குறித்து செய்தி வெளியிட்டமைக்காகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்டார். அது சம்பந்தமான அனுப்பப்பட்ட எழுத்து மூலமான கடிதத்தில், அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் முறையீட்டிற்கு அமைய அது தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்காகவே வரவழைக்கப்படுகின்றாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு ஊடகவியலாளர்களை அழைக்கவேண்டாம்என்றுபிரதமர்அறிவுறுத்தியதாகஊடகங்களில் செய்தி வெளிவந்தபோதிலும், அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று 28 ஆம் திகதி லங்காதீப அலுவலகத்திற்கு சென்றுள்ளனர், இருந்தபோதிலும் கருத்து தெரிவிக்க லங்காதீப ஆசிரியர் மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுத் தெரிவித்ததாவது, பத்திரிகை ஆசிரியர் உட்பட ஊடகவியலாளர்களிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டாமென அறிவுறுத்தியிருந்தும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அந்த உத்தரவை மீறிச் செயற்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டது, இது "ஊடகவியலாளர்களை வேட்டையாடுவதற்கும் ஊழல்வாதிகளைப் பாதுகாப்பதற்கும் ஊழல் வெளிப்படுவதைத் தடுப்பதற்கும் வெட்கமில்லாத முயற்சி" என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**செப்டம்பர் மாதத்தில், ஊடக சுதந்திரம் தொடர்பானசட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகளின் கீழ் வரும் நான்கு சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இவற்றில் மிக முக்கியமான சம்பவமாகக் குடிமக்களின் அனைத்து வகையான ஜனநாயக உரிமைகளையும் சவாலுக்கு உள்ளாக்கும் அவசரகால நிலையை மீண்டும் அமுலுக்கு உட்படுத்தியதாகும். மேலும், மொனராகலை தேர்தல் மோசடி வழக்கின் தீர்பானது, சிவில் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வெற்றிகளுக்குத் தகவல் பெறும் உரிமை எவ்வாறு பங்களிக்கிறது என்பதை பிரதிபலிக்கும் ஒரு சாதகமான நிகழ்வாகக் கருதலாம். லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான சர்வதேச மட்டத்தில் வழக்கு விசாரணையின் ஆரம்பம், "ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனையின்மை" என்ற சூழலில் சாதகமான வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது.**

**அட்டவணை: 03**

**2021 செப்டம்பர் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– 04 நிகழ்வுகள்**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 01 |
| 02 | ஊடக சுதந்திரத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டரீதியான கட்டுப்பாடு | 01 |
| 03 | தகவல் உரிமை | 01 |
| 04 | ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையின்மை | 01 |
| | **மொத்தம்** | **04** |

1. **ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.**

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அவசரகால விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்புமீதான தீர்மானம் செப்டம்பர் 6 திகதி அன்று பாராளுமன்றத்தில் 81 மேலதிக வாக்குகள் நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

அத்தியாவசிய சேவைகளை வழங்குவதிலும் வழங்குவதிலும் உள்ள தடைகள் காரணமாக ஜனாதிபதி உட்பட அரசாங்கம் அவசரகால நிலையை அறிவித்துள்ளது. அவசரகாலச் சட்ட அமுலாக்கத்தின், தெரிவிக்கப்படும் நோக்கங்கள் எதுவானாலும் அவசரகால சட்டமானது பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளைக் கடுமையாகச் சவாலுக்கு உள்ளாக்குவதாக அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்பினர்களின் நிலைப்பாடாகும்.மேலும், தெரிவிக்கப்படும் குறித்த நோக்கத்தை அடைய சட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே உள்ளன என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தேசிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஆதாரம்: 1. srilankabrief.org 2. www.hirunews

2. **கொத்தலாவல சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 ஆர்வலர்களை தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டமை.**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக புதிய சட்ட மூலத்திற்கு எதிராகப் ஆர்ப்பாட்டம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவ மற்றும் அரசியல் ஆர்வலர்கள் ஐந்து பேரையும் பிணை வழங்காமல் இன்னும் 14 நாள் தடுப்புக்காவலில் வைக்குமாறு கடுவல நீதவான் நீதிமன்றம் செப்டம்பர் 21 ஆம் திகதி உத்தரவிட்டது. மாணவ மக்கள் சம்மேளனத்தின் கோஷிலா ஹன்சமாலி, முன்னிலை சோஷ லிசக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் சமீர கொஸ்வத்த, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் அமில சந்தீப, அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் ரஜரட்ட பல்கலைகழகத்தின் ஹேஷான் ஹர்ஷன ஆகியோருக்கு பிணை வழங்கக் காவல்துறை அதிகாரிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், அவர்கள் சார்பாக ஹோமாகம உயர் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாராளுமன்றத்திற்கு அருகில் ஆகஸ்ட் 03 ஆம் திகதி நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அட்டைப்பலகையினால் அமைக்கப்பட்ட சவப்பெட்டியொன்றை தீயிட்டு எரித்ததன் காரணமாக 179,000 ரூபா பெறுமதியான அரச சொத்து சேதமாக்கப்பட்டதாகக் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பொதுச்சொத்துக்கு சேதம் விளைவிக்கும் புகைப்படம் மற்றும் காணொளிப்பதிவுகள் கொண்ட சாட்சிகள் காணப்படுவதாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய முதல் நாளே தெரிவித்த போதிலும் இன்றுவரை அந்தவிதமான எவ்வித சாட்சிகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க காவல்துறையினர் தவறிவிட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட ஐந்து பேரின் நான்கு பேருக்குக் கொரோனா தொற்று உருதிசெய்யப்பட்டதால், அவர்கள் பாரிய சுகாதார பிரச்சினைக்கு முகம்கொடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையானது, கருத்துச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகும் எனக் குறிப்பிடும் சுதந்திர ஊடக இயக்கம், குறித்த சம்பவம் தொடர்பில் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டது.

மூலாதாரம்: yournews.lk

3. **தகவல் சட்டத்தை பயன்படுத்தி பெறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு சமூக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் மோசடி வழக்கில் வெற்றிப் பெற்றமை.**

மொனராகலை உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸாநாயக்க செப்டம்பர் 13 ஆம் திகதி அன்று “தகவல் அறியும் உரிமைச் சட்டம்“ மற்றும் பிற தனிப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் சிறந்ததொரு வழக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கினார்.

கடந்த உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் மொனராகலை மாவட்ட உள்ளூராட்சி அதிகார சபையின் வேட்பாளர் ஒருவர் தேர்தல் காலப்பகுதியில் வாக்காளர்களுக்குப் பல்வேறு விதமாக லஞ்சம் கொடுத்த காரணத்தினால் பாதிப்புக்குள்ளான எதிர்க்கட்சி குழுவின் வேட்பாளரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், லஞ்சம் கொடுத்த வேட்பாளரின் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து குறித்த நபரைத் தகுதி நீக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

PAFFREL மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் உதவியுடன் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இது தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லாகவும் தகவல் சட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வாய்ப்பாகவும் ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகத்தால் பாராட்டப்படுகின்றது.

4. **சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக எதிர்வரும் நவம்பர் 02 ஆம் திகதி நெதர்லாந்து ஹேங் நகரத்தில் அமைந்துள்ள "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாயம்"** The People's Tribunal on the Murder of Journalists **வழக்கு விசாரணை நடத்த தீர்மானம் செய்யப்பட்டமை.**

12 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பாக எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி நெதர்லாந்து நாட்டில் உள்ள ஹேக் நகரில் அமைந்துள்ள "ஊடகவியலாளர் கொலைக்கான மக்கள் தீர்ப்பாய" (The People's Tribunal on the Murder of Journalists) த்தில் வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு குழு (CPJ) செப்டம்பர் 28 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டது.

இந்த நீதிமன்றம் அடிமட்ட அளவில் நீதிக்கான ஒரு பொறிமுறையாகும் என்பதுடன் லசந்த விக்ரமதுங்க, மிகேல் அங்கள் லோபெஸ் வெலேச்கோ மற்றும் நபீல் சர்பாஜி ஆகிய ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பில் நீதியை நிலை நாட்டுவதற்கு இலங்கை, மெக்சிகோ மற்றும் சிரியா போன்ற அரசுகள் தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஃப்ரீ பிரஸ் லிமிடெட் (FPU), எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு (RSF) மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (CPJ) ஆகியவற்றின் வேண்டுகோளின் பேரில், நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் வழக்கை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

மூலாதாரம்: cpj.org

## கட்டமைப்புரீதியான விதிமுறைகள்

**கட்டமைப்புரீதியான விதிமுறைகள் "ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அந்த தலைப்பின் கீழ் ஆகஸ்ட் மாதத்தில் மூன்று சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை "கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு" என்ற பிரிவின் கீழ் 3 நிகழ்வுகள் உள்ளடக்கப்படுகின்றன. இலங்கையில் மனித உரிமைகளின் போக்கை ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய குழுவினர் இலங்கைக்கு வருகை தருவது ஊடக சுதந்திரத்தில் சாதகமான காரணியாகப் பார்க்கப்படுகிறது.**

**அட்டவணை: 04**

**2021 செப்டம்பர் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் –03 நிகழ்வுகள்**

| இலக்கம் | குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| | **மொத்தம்** | **03** |

1. **இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் குறித்த தொடர் விவாதங்களை ஏற்பாடு செய்தமை.**

   செப்டம்பரில், இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் மற்றும் ஊடக சுதந்திரம் உட்பட ஜனநாயக உரிமைகளுக்குச் சவாலான தொடர் விவாதங்களை ஏற்பாடு செய்தது. அந்தத் தொடரின் முதல் உரையாடல் செப்டம்பர் 10 ஆம் திகதி" பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் வரலாறு" என்ற தலைப்பில் வழக்கறிஞர் ரமணி முத்தெட்டுவேகம அவர்களால் நடத்தப்பட்டது.

   "அவசரகால சட்டம்" தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் தொடரின் முதல் விவாதம் "அவசரகாலச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் செப்டம்பர் 11 ஆம் திகதி நடைபெற்றதுடன், கலாநிதி தீபீகா உடகம, சிரேஷ்ட ஊடகவியலாளர் போத்தல ஜயந்த மற்றும் சட்டத்தரணி ஜகத் லியான ஆராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

   இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், தமிழ் மற்றும் சிங்களத்தில் இரண்டு உரையாடல்களை அவசரகாலநிலை மற்றும் ஊடகம் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்தது. செப்டம்பர் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் அந்தக் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

2. **சர்வதேச தகவல் அணுகல் தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் திறந்த கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை. (தேர்தல் மோசடி தொடர்பான வெற்றி வழக்கை கருப்பொருளாக கொண்டு)**

   செப்டம்பர் 28 ஆம் திகதி அன்று "சர்வதேச தகவல் அணுகல் தின" விழாவையொட்டி, சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்த திறந்த பொது கருத்தாடல் செப்டம்பர் 25 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இணையவழியில் (மெய்நிகர்) நடைபெற்றது.

   தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி வெற்றிகொண்ட மொனராகலை தேர்தல் வழக்கை கருப்பொருளாக கொண்டு இந்த பொது கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் பேச்சாளர்களாக பெபரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறையின் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் எம். டீ. எம். மஹீஸ், கண்டி மாவட்ட சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் திட்ட முகாமையாளர் யோகேஸ்வரி கிருஷ்ணன் மற்றும் கந்தலே தேசிய ஒத்துழைப்பு மேம்பாட்டு அறக்கட்டளை திட்ட முகாமையாளர் சுரங்க ரூபசிங்க போன்றோர் கலந்துகொண்டனர்.

   மூலாதாரம்: wedabima.lk

3. **மனித உரிமைகள் போக்குகளை ஆய்வு செய்ய ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தமை.**

   செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 5 வரை இலங்கையின் மனித உரிமைகள்குறித்து ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. இந்தக் காலப்பகுதியில் தூதுக்குழுவானது அரசு, அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம், தொழில் அதிபர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளைச் சந்தித்தது.

   ஜூன் நடுப்பகுதியில், ஐரோப்பிய பாராளுமன்றத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்வது, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் GSP+ வரி நிவாரணம் உட்பட இலங்கைக்கு வழங்கும் பயங்கரவாத எதிர்ப்பு உதவியைத் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

   ஊடகத்தின் மீதான அடக்குமுறை மற்றும் கருத்து சுதந்திரத்தை தடுப்பது ஆகியவை தீர்மானத்தின் கூடிய கவனம் செலுத்திய விடயங்களாகும்.மேலும் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தல், சட்டத்தின் சீர்கேடு, காணாமல் ஆக்கப்படுதல், தடுப்புக்காவலில் தடுத்து வைத்துள்ளவர்களை கொலைசெய்தல், குழந்தைத் தொழிலாளர்களைச் சுரண்டுவது மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பறித்தல் போன்ற பல்வேறு விதமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையை குற்றம்சாற்றியுள்ளனர்.

**அட்டவணை: 05**

**ஊடக சுதந்திரம் : 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிக்கூறுகள், தலைப்புக்கள் | 2021 ஜனவரி– ஆகஸ்ட் | | 2021 செப்டம்பர் |
|---|---|---|---|
| | புதிய நிகழ்வுகள் | முன்னைய நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 37 | | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 37 | 04 | 04 |
| ஊடக சுயாதீனத்துவம் | 02 | | - |
| ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய .முக்கிய போக்குகள் | 01 | | - |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 06 | | 03 |
| **மொத்தம்** | **83** | **04** | **12** |

2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி-செப்டம்பர் வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


**Free Media Movement**

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25